DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 67/2022**

Deposition of Witness: PW1

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜசேகரன் | Father Name –பரமசிவம் | |
| Age | 58 | Village – | திருமலாபுரம் |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.09.2025.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. 1925, 1936, 1988 ஆகிய வருடங்களில் உள்ள நான் சொன்ன பத்திரங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். ஆனால் தற்போது பத்திரத்தை கொண்டு வரவில்லை. மேற்படி பத்திரங்கள் என்னிடம் உள்ளதா என்றால் அசல் என்னிடம் இல்லை சான்று நகல் உள்ளது. என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ 8 ஆவணத்தில் 10 வது பக்கத்தில் உள்ள ஆவணப்பட்டியலில் நான் காண்பித்துள்ள 12.09.1988 ம் தேதிய கிரையப்பத்திர அசல், 11.09.2020 ம் தேதிய பாகவிஸ்தீரண பத்திர அசலை நான் நீதிமன்றத்தில் இருந்து வாங்கிவிட்டேன் என்றால் அதுபற்றி சரியாக ஞாபகம் இல்லை. 12.09.1988 ம் தேதிய பத்திரத்தை நான் தாக்கல் செய்தால் என்னுடைய வழக்கிற்கு பாதகமாகிவிடும் என்பதால் தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எந்த பத்திரத்தையும் மறைக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. 11.09.2020 ம் தேதிய பாகவிஸ்தீரண பத்திரத்தின் அசலை இவ்வழக்கின் வாசாஆ 5 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது 12.09.1988 ம் தேதிய என்னுடைய வீட்டு பத்திரத்தின் நகல் என்றால் சரிதான். **12.09.1988 ம் தேதிய கிரையப்பத்திரம் நகல் பிவாசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சி இந்த கிரையப்பத்திரத்தின் அசல் தன்னிடம் உள்ளதாக சொல்கிறார். அதனால் பிவாசாஆ 3 – 2 ம் நிலை சாட்சியமாக குறியீடு செய்யப்படுகிறது.**

2. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தின் 2ம் பாராவில் வழக்குரைச் சொத்து 23.11.1951ம் தேதிய பதிவு பெற்ற பாத்திய விடுதலை பத்திரம் மூலம் கிடைக்கப்பெற்றது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. 1988ம் ஆண்டு கிரையப்பத்திரம் வாங்கும்போது எனது தகப்பனார் போடி பழைய பேருந்து நிலையத்தில் என் தகப்பனார் ஒரு ஹோட்டலும், இட்லிமாவு அரைக்கும் கடையும் வைத்திருந்தார் என்றால் 1980ம் ஆண்டு வரை தான் மாவுகடை வைத்திருந்தார். அதற்கு முன்பாக 1970ம் ஆண்டு வரை ஹோட்டல் நடத்தி வந்தார். எனது தந்தை ஹோட்டல் மற்றும் மாவுகடை நடத்தி வந்து ஈட்டிய வருமானத்தில் தான் 12.09.1988ம் தேதி என் தந்தை என் பெயரில் சொத்தை(பிவாசாஆ 3) வாங்கினார் என்றால் சரியல்ல. 11.09.2020ம் தேதிய பாகவிஸ்தி பத்திரத்தில் வழக்குரைச் சொத்து எந்த பதிவு பத்திரத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

3. என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ 5 ஆவணத்தில் 3வது பக்கத்தில் நா.க.எண்.1696/19/F1 என குறிப்பிடப்பட்டுள்ள பட்டாவை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அவர் தாக்கல் செய்தாரா என எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ 8 ஆவணப்பட்டியலில் காண்பித்துள்ள வழக்குரை சர்வே எண்.265/Part க்கு உரிய பட்டாவும், சர்வே எண்.268/Part க்கு உரிய பட்டாவையும் நான் நீதிமன்றத்தில் இருந்து திரும்ப பெற்று சென்றுவிட்டேன் என்றால் அதுபற்றி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. சர்வே எண்.265/Part க்கு உரிய பட்டாவும், சர்வே எண்.268/Part க்கு உரிய பட்டாவையும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னுடைய வழக்கறிஞரிடம் தான் கேட்க வேண்டும்.என் பெயரில் 12.09.1988ம் ஆண்டு ஏற்பட்ட கிரையப்பத்திரத்தின்(பிவாசாஆ 3) அடிப்படையில் நான் பட்டா கேட்டு விண்ணப்பம் ஏதும் அளித்துள்ளேனா என்றால் அளிக்கவில்லை. எனது தந்தை பெயரில் பட்டா உள்ளது. 1988ம் ஆண்டு கிரையம் பெற்ற சொத்து என்

தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றால் என் தந்தைக்கு பாத்தியப்பட்டு சர்வே எண்.268 ல் பட்டா எண்.2711 என ஏற்பட்டு 1744 சதுர அடி உள்ளது. அது தெரியாமல் நான் கிரையம் வாங்கிவிட்டேன். மேற்படி பட்டா எண்.2711 யை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். சர்வே எண்.265, 268 ஆகிய நிலங்களுக்கு யார் பெயரிலும் பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல.

4. நான் கிரையம் வாங்கிய சொத்து 662 சதுர அடி என்றால் நான் தவறாக கிரையம் வாங்கிய சொத்து 662 சதுர அடி ஆகும். அந்த கிரையப்பத்திரத்தில் (பிவாசாஆ 3) 2 லக்கச் சொத்து உள்ளது தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய கிரையப்பத்திரத்தில் 1 வது லக்கச் சொத்தாக 374 சதுர அடியும், 2 வது லக்க சொத்தாக 288 சதுர அடி என மொத்தமாக 662 சதுர அடி கிரையம் பெற்றப்பட்டது என்றால் சரிதான். 1 வது லக்கச் சொத்தின் மேற்கு பக்கம் சர்வே எண்.265, 268 நம்பர் எனது சொந்தத்திற்கு நிறுத்திக்கொண்ட பிரிவு மனை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. வாதியின் வீட்டிற்கு மேற்கே உள்ள சொத்து S.K சௌந்தர்ராஜன் சொத்து என்றால் சரியல்ல. மேற்கு பக்க வீட்டில் கருணாகரன் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். கருணாகரன் குடியிருக்கும் வீடு சுமார் 778 சதுர அடி இருக்குமா என்றால் அதுபற்றி எனக்கு சரியாக தெரியாது. என்னுடைய கிரையப்பத்திரத்தின் 1 வது லக்கச் சொத்தில் மேற்கு சுவரும், வடக்கு சுவரும் பொது மண் சுவர் பாத்தியம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது தவறாக சொல்லப்பட்டுள்ளது. 2 வது லக்கச் சொத்தின் வடக்கு பக்கம் பொது மண் சுவர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. பி.வா.சா.ஆ.3 பத்திரத்தின் அடிப்படையில் நான் கிரையம் பெற்ற சொத்திற்கு வடக்கில் கிழ மேலாக 41 அடி பொது மண் சுவர் உள்ளது என்றால் கிரையம் பத்திரத்தில் அவ்வாறு தான் உள்ளது. ஆனால் அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. என் கிரைய பத்திரத்தின் அடிப்படையில் என் கிரைய சொத்திற்கு வடக்கேயோ மேற்கேயோ எனக்கு பாத்தியப்பட்ட எந்த

சொத்துக்களும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் என்னுடைய மண்சுவர் தகர மனை சுமார் 60 வருடம் பழக்கமானது என்று உள்ளது என்றால் சரிதான். அந்த பழைமையான தகர மனை இன்று வரை பாதுகாத்து வருகிறேன் என்றால் சரிதான்.

6. கருணாகரன் என்பவர் எனது பெரியப்பா கருப்பையாவின் மூன்றாவது மகன் என்றால் சரிதான். நகராட்சி TSLR ல் கருப்பையா நாடார் என்பதற்கு பதிலாக தவறுதலாக கருப்பணம்பலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1968 அடங்கலில் கருப்பையா நாடார் என சரியாக உள்ளது. என்னுடைய கிரைய ஆவணமான பி.வா.சா.ஆ.3 ல் வடக்கு நான்கு மாலாக சர்வே எண்.265, 268 நம்பர் ஜெ.காசிமணியம்மாள் நிலம் என 1வது பிரதிவாதி நிலம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது தவறாக உள்ளது. சர்வே எண்.265, 268 உள்ள வீடுகள் பழைய தகர மனையாகவும் பழைய கார கட்டிடமாகவும் உள்ளது என்றால் சர்வே எண்.265 ல் பழைய தகர செட் உள்ளது, சர்வே எண்.268 ல் காசிமணியம்மாள் புதிதாக வீடு கட்டியுள்ளார்.

7. வா.சா.ஆ.5 ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள பத்தாவது தாள் 24.06.2019 அன்று கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சர்வே பதிவேட்டில் 1வது பதிவில் சர்வே எண்.265/1 கருப்பையா பெயரில் தாக்கலாகி உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.265/1 ற்கும் எனக்கும் எந்த சம்மந்தமுமில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.265/1ல் கடைசியில் கருப்பையா மகன் கருணாகரன் என்பதற்கு பதிலாக என்னுடைய பெயர் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பட்டாவில் என் பெயர் சரியாக உள்ளது. சர்வே எண்.265/1ற்கு கருப்பையா பெயரில் பட்டா உள்ளது ஆனால் நான் அந்த சொத்தில் குடியிருந்து வருகிறேன். சர்வே எண்.268/3 ற்கு பட்டா என் பெயரில் உள்ளது ஆனால் கருணாகரன் குடியிருந்து வருகிறேன். சர்வே எண்.268/2 ற்கு பட்டா என் பெயரில் உள்ளது ஆனால் காசிமணியம்மாள் குடியிருந்து வருகிறேன்.

8. சர்வே எண்.265/1ன் விஸ்தீரணம் 0.0085.5 சதுர மீட்டர் என TSLR ல்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.265/1ன் மொத்த சதுரடி எவ்வளவு உள்ளது என்றால் சரியாக எனக்கு தெரியாது. சர்வே எண்.265/1ல் ஓடு வீடு இருப்பதாக தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். TSLR ல் சர்வே எண்.268/2ல் ஓடு வீடு இருப்பதாக தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் TSLR ல் சொல்லியுள்ள சர்வே எண்.265/1 மற்றும் சர்வே எண் 268/2ல் உள்ள சொத்தில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்து எது என்றால் சர்வே எண்.268/2ல் 1744 சதுரடி எனக்கு பாத்தியப்பட்டது சர்வே எண்.265/1ல் எனக்கு பாத்தியப்பட்ட நிலங்கள் இல்லை ஆனால் அதில் நான் குடியிருந்து வருகிறேன். நான் தவறான ஆவணங்களை சார்பதிவாளரிடம் தாக்கல் செய்து மோசடியான பாகப்பிரிவினை பத்திரத்தை பதிந்துள்ளேன் என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2025.09.02 16:37:13 +0530

District Munsif,
Bodinayakanur.